**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.33/2025**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **20.01.2026** |
| **பெயர்** | **செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.34**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

06.09.2012 –ற்கு பிறபாடு என் மகனான பவர் ஏஜெனடிடம் ஏதவாது கிரையத் தொகை செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். பவர் பத்திரத்திற்கு எத்தனை நாள் கழித்து கிரைய தொகை செலுத்தினேன் என்றால் 15.09.2012–ற்கு முன்பாகவே கிரையத் தொகை செலுத்திவிட்டேன். எதன் அடிப்படையில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் உள்ள கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் நான் கிரையத் தொகை செலுத்தினேன் என்றால் தேதி நினைவில் இல்லை. பத்திரப்பதிவிற்கு முன்பாக செலுத்திவிட்டேன்.

நான் கிரையத்தொகை செலுத்தியத்றகு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் சாட்சி இந்த கேள்வி வழக்கிற்கு சம்பந்தமில்லாத கேள்வி என

கூறினார். என்படி இந்த பத்திரத்தின் கிரையத் தொகை குறித்து எந்த கேள்வி கேட்டாலும் வழக்கிற்கு சம்பந்தமில்லை என்று கூறும் பதில் வழக்கிற்கு தொடர்புடைய பதிலா என்றால் சாட்சி இந்த கேள்விக்கு ஏற்கனவே பதில் அளித்துவிட்டதாக கூறினார். நான் கிரையத் தொகை செலுத்தியதற்கான ஆதாரம் இல்லாத காரணத்தினால் தான் தற்போது நான் வழக்கிற்கு தொடர்பில்லாத கேள்வி என்று பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்நாள்வரை கிரையத் தொகை செலுத்தியத்றகான ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சாட்சி மீண்டும் இந்த கேள்வி வழக்கிற்கு தொடர்பில்லாத கேள்வி என்று பதில் அளித்தார். எனது பத்திரம் அனைத்தும் சட்ட ரீதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான் பிரதிவாதி வாடகை செலுத்த ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய உரிமையை பிரதிவாதி ஏற்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் கிரையப்பத்திரத்தின் படி கிரையத் தொகை எவ்வளவு என்றால் கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்படுள்ள தொகையே சரியானது. அரசாங்கத்தை ஏமாற்றம் நோக்கத்தோடு என்னுடைய கிரையப்பதிரம் ஏற்படுத்தப்பட்டதால் அது சட்ட ரீதியாக செல்லாது என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் அசல் பத்திரத்தை தாக்கல் செய்யாமல் அதற்கான காரணம் எதுவும் கூறாமல் அதன் சான்றிட்ட நகலே தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு தொடர்பான கிரையத்தொகை செலுத்தியதற்கான ஆதாரம், கிரைய ஒப்பந்தம் மற்றும் பொது அதிகாரப்பத்திரம் போன்றவை சமர்ப்பிக்காத காரணத்தினால் மேற்சொன்ன கிரையப்பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றும் அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 3 பொய்யான ஆவணம் என்றும், நானும் எனக்கு நிலத்தினை விற்பனை செய்தவர்கள் பொய்யாக ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.16 பி.எம்.**